பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

செல்லையா
சிவபாதலிங்கம்
வைரக்கல் நகை
வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
கொலைபேசி 23794
ஒடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில்செய்து கொடுக்கப்படும்.

உதயன்

விலை
ரூ2/50

Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road,
JAFFNA.
T. Phone: 23794

கடல்: 4 சுக்கில ஷு ஆடி மீ 01 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 12 (16 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 189

வவுனியாப் பகுதியில் வியாழனன்று

இலங்கை-இந்திய படைகள் மோதல்!

லண்டன், ஜூலை 16

வவுனியாப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இலங்கை — இந்தியத் துருப்புகள் இடையே மோதல் ஏற்பட்டதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

இந்தச் சம்பவத்தில் நான்கு இந்தியத் துருப்புகளும், இந்திய ஆதரவுடைய தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த மூன்று பேரும் கொல்லப்பட்டதாக அந்தச்செய்தி மேலும் தெரிவித்தது.

இந்த மோதல் சம்பவம் குறித்து முரண்பாடான செய்திகள் வெளியாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் சிங்களக் கிராமம் ஒன்றை இந்தியத் துருப்புகள் தாக்கியதாகவும், இலங்கைத் துருப்புகள் திரும்பித் தாக்கியதில் இந்திய வீரர்கள் உயிரிழந்ததாகவும் இலங்கை இராணுவ வட்டாரச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கை இராணுவப்படை வீரர்கள் இருவர் கடத்தப்பட்டதை அடுத்து இந்த மோதல் சம்பவம் ஏற்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

ஆனால் இந்தச் சம்பவம் எதிர்பாராமல் நடந்து விட்ட ஒரு விபத்து என்றும் —

இலங்கை இராணுவத்தினர் தங்களை இந்தியப் படைகள் தாக்கி விட்டதாகத் தவறாக எண்ணிவிட்டார்கள் என்றும் அமைதிப்படை வட்டாரங்கள் கூறியதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ—9)

இன்று ஆடிப்பிறப்பு

இன்று ஆடிப்பிறப்பு தினம். அறிவியல் ஆத்மீக உலகியல் உண்மைகளை அடிநாதமாகக் கொண்டது இத்தினம்.

ஆடி மாதத்தில் இறந்தவர்களுக்கான பிதிர்க் கடன் செலுத்தப்படுகிறது.

ஆடி பிறந்தவுடன் ஆடிக் கூழ் காய்ச்சி, பிதிர்களுக்குப் படைத்து கற்றத்தார்களுடன் உண்டு மகிழ்வது தமிழர் பாரம்பரியம். (உ—8)

ராஜீவுக்கு விளக்கமளிக்க தேஷ்முக் அவசர பயணம்

புதுடில்லி, ஜூலை 16

இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விவரங்களை பிரதமர் காந்தியிடம் அவசரமாக எடுத்துரைப்பதற்காக திரு. பி. ஜி. தேஷ்முக் இன்று இஸ்லாமபாத் செல்கிறார்.

பிரதமர் காந்தி இன்று மாஸ்கோவில் இருந்து புறப்பட்டு இஸ்லாமபாத் வந்து சேருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பேச்சுவார்த்தை குறித்து இந்தியப் பிரதமரிடம் அவசரமாகவிளக்கமளிப்பதற்காகவே திரு. தேஷ்முக் இஸ்லாமபாத் விரைகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

தேடுதல்

கலவியங்காடு, முடமாவடி, சட்டநாதர் கோவில் பகுதிகள், நேற்றுக் காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இந்திய அமைதிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டன. (உ-10)

நாட்டின் நிதி நிலைமை மிக மோசம் எனத் தகவல்

கொழும்பு, ஜூலை 16

இலங்கையின் நிதிக் கையிருப்பு, எத்தியோப்பிய நாட்டின் கையிருப்பு அளவுக்குக் குறைந்துவிட்டதாக கருதப்படுகிறது.

உலகின் மிகவும் வறிய நாடுகளில் எத்தியோப்பியா முதலிடத்தில் உள்ளது.

இலங்கையின் பண வீக்கம் பத்துச் சதவீதம் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டாலும், கொழும்பில் இருந்து வரும் தகவல்களின்படி பணவீக்கம் 25 சதவீதம் என்று அமெரிக்க பாதுகாப்பு வெளிவிவகாரசஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது. (உ-எ)

கரம்பன் சந்தியில் நேற்று நடந்த மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

ஊர்காவற்றுறை, கரம்பன் சந்தியில் நேற்று நண்பகலில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதில் ஒரு குழுவைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர். நான்கு பேர் காயமடைந்தனர். எதிர்த் தரப்பில் எற்பட்ட சேதவிவரங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இந்தச் சம்பவத்தின் பின்னர் அப்பகுதிக்கு படையினர் விரைந்தனர். தொடர்ந்து நற்று மாலை வரை மோதல் சம்பவங்கள் இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-10)

இளைஞர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கல்வியங்காட்டுப் பகுதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். (உ-10)

ஈரோஸ் உறுப்பினர் திருநெல்வேலியில் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 16

திருநெல்வேலி சிவன் கோயில் பகுதியில் வைத்து நேற்று நண்பகல் ஈரோஸ் இயக்க உறுப்பினர் ஒருவர் கட்டுக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் சோமசுந்தரம் திருமுருகன் (வயது 28) எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

தாதிமாருக்கு ஸ்கூட்டர்

கொழும்பு, ஜூலை 16

அரச ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் தாதிமாருக்கு தவணை அடிப்படையில் பணம்செலுத்தும் திட்டத்தின் கீழ் ஸ்கூட்டர்களை வழங்க சுகாதார அமைச்சர் சம்மதித்திருக்கிறார்.

கடமைக்கு நேரத்துக்குச் செல்ல தாதிகளுக்கு ஸ்கூட்டர்களை சுங்கவரியின்றி வழங்க வேண்டும் தாதிமார் சம்மேளனம் கோரியிருந்தது.

இக்கோரிக்கையை பொதுநிர்வாக அமைச்சும் ஏற்றுக் கொண்டுள்ளது. [இ-எ]

முச்சந்தி முரளி

அப்ப இவி ஆஸ்பத்திரிகளிலே ஸ்கூட்டர் கதியிலே வேலை நடக்கும் எண்டு சொல்லுங்கோ.....!

அமைதிப்படை விவகாரம்; அமைச்சர்களிடையே கருத்து வேறுபாடு இல்லை!

கொழும்பு, ஜூலை 16

அமைதிப்படை விலகல் தொடர்பாக அமைச்சரவையில் கருத்துவேற்றுமை கிடையாது.

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தின முன்கண்டவாறு கொழும்பில் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-எ)

ராஜீவின் நம்பிக்கை

பாரிஸ், ஜூலை 16

அமைதிப்படை விலகல் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசுடன் இந்தியா தீர்வு ஒன்றுக்கு வரமுடியும்.

பாரிஸில் வைத்து ஹிந்துஸ்தான் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவித்தார். (இ)

அமைதிப்படை போகமறுத்தால் ஜனாதிபதி என்ன செய்வார்?

"சண்டே" சஞ்சிகைக்கு அவரே பதில்

கொழும்பு, ஜூலை 16

அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேற மறுத்தால் இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா என்ன செய்வார்? அதனால் எழும் நிலையை எப்படிச் சமாளிப்பார்?

இப்படிக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு திரு. பிரேமதாசா கற்றத்தார்களுடன் உண்டு மகிழ்வது தமிழர் பாரம்பரியம். (உ-8)

இந்தியாவிலிருந்து வெளியாகும் 'சண்டே' சஞ்சிகைக்கு ஜனாதிபதி பிரேமதாசா பேட்டியளித்தார்:

ஜனாதிபதியான பின்னர் திரு. பிரேமதாசா இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த முதலாவது பேட்டி இதுவாகும்.

பேட்டியில் இடம்பெற்ற கேள்வி — பதில் விவரம் வருமாறு.

கேள்வி: இந்திய அமைதிப்படை இலங்கையில் தொடர்ந்து இருப்பதை ஐ. நா. சர்வதேச நீதிமன்றம் ஆகிய சர்வதேச அரங்குகளில் எழுப்புவீர்களா?

ஜனாதிபதி: அப்படி ஒரு நிலைவரும் என்று எண்ணவில்லை. புத்தர், அசோகன், காந்திஜி போன்ற பெரியவர்கள் பிறந்த ஒரு நாடு சர்வதேச அரங்கில் சிறிய ஒரு நாட்டுக்கு இப்படியான பிரச்சினையைக் கிளப்பும் நிலை உருவாக்குமா?

கேள்வி: அமைதிப்படை

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

16—07—1989

ஆடி 01 — ஞாயிற்றுக்கிழமை

நக்ஷத்திரம்: கேட்டை

சுபநேரம்:

09.00 முதல் 10.30 வரை

ராகுகாலம்:

04.30 முதல் 06.00 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

பிரதோஷ விரதம்

★ தமிழ்ப் பகுதிகளில் தொடர்ந்து

2 ஆவது நாளாக நேற்றுத் துக்கம்

அமிர், யோகேஸின் இறுதிக் கிரியைகள் நாளையே நடைபெறும் என அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வெ யோகேஸ்வரன் ஆகியோரின் மறைவையொட்டி தமிழர் பகுதிகளில் தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்றுத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை இரு தலைவர்களினதும் இறுதிச் சடங்குகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டா நாளை திங்கட்கிழமை மாலையே இறுதிச்சடங்குகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, ஜூலை 16

திரு. அமிர்தலிங்கத்தி இரு புதல்வர்களில் ஒருவரான திரு. காண்டீபன் லண்டனில் இருந்து வருவதில் தாமதம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப் படுவதாலேயே இறுதிச் சடங்குகள் ஒரு நாள் பிற்போடப்பட்டுள்ளன. மற்றைய புதல்வர் பரீதன் இந்தியாவில் உள்ளார்.

நேற்று கொழும்பு பௌத்த லோக மாவத்தையில் பொது மக்களின் அஞ்சலிக்காக பூதவுடல்கள் வைக்கப்பட்டிருந்தன.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பூதவுடல்கள் ஸ்ரீலங்கா விமானப்படை விமானம் மூலம் மட்டக்களப்புக்கு எடுத்து செல்லப்படும்.

இன்று நண்பகல் 12. 00 மணிமுதல் மாலை 4. 00 மணி வரை பூதவுடல்கள் மட்டக்களப்பு நகரசபை மண்டபத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அமிர்-யோகேஸ் மரண விசாரணை

கொழும்பு, ஜூலை 16

கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் மரணங்கள் பற்றிய மரணவிசாரணை கொழும்பு மேலதிக நீதிவான் ஜனாப் எம். எம். ஏ. கபூர் முன்னிலையில் நடைபெற்றது.

அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் குழு உறுப்பினர் திரு. சோமசுந்தரம் செனாதிராஜா (மாவை சேனாதிராஜா) சொன்னதாவது:-

சம்பவதினத்துக்கு மூன்று தினங்களுக்கு முன்னர் திரு. யோகேஸ்வரன் என்னிடம் ஒரு குறிப்பிட்ட சிலர் தன்னுடன் தொடர்புகொண்டு பேச்சுக்கள் நடத்த திகிகேட்டதாகச் சொன்னார்.

இந்தவிஷய அமிர்தலிங்கத்துக்கும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழன் மாலை 5-30 மணிக்கும் 6-30 மணிக்கும் இடையில் பேச்சுக்களை நடத்தலாம் என்று அமிர்தலிங்கம் சொன்னார்.

இந்த நேரத்தை ஒதுக்கியதற்குக் காரணம், பிரதமர் காந்தியின் சிறப்புத் தூதர் தேஷ்முக்குக்கு இந்தியத்தூதர் கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் அளித்த விருந்துபசாரத்தில் கலந்துகொள்ள அமிர்தலிங்கமும் அழைக்கப்பட்டிருந்ததே ஆகும்.

அன்று மாலை 6-30 மணியளவில் நீர்மாடியில் நான் டிவியில் தமிழ்ச் செய்தியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது திருமதி யோகேஸ்வரன் அந்த நபர்கள் வந்து விட்டதாக தகவல் அனுப்பினார்.

அதைத்தொடர்ந்து அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும் மேல்மாடிக்குச் சென்றனர்.

தொடர்ந்து நான் கீழ்மாடியில் டிவி பார்த்துக்கொண்டிருந்தேன்.

சத்தம் கேட்டது

20 நிமிடங்கள் கழித்து மேல் மாடியில் இருந்து துப்பாக்கிச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஜே. ஆர், சிறிமா, லலித் உட்பட பலர் அஞ்சலி

கொழும்பு, ஜூலை 16

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்று கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் பூதவுடல்களுக்கு நேரில் போய் அஞ்சலி செலுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அமைச்சர்கள் திரு. எஸ். தொண்டமான், திரு. காமினி திஸாநாயக்கா, திரு. ரணில் விக்கிரமசிங்க, திரு. அனுரா பண்டாரநாயக்கா உட்பட பல எம்.பிக்கள் அஞ்சலி செலுத்தினர்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. எல். எல். மெஹ்ரோத்ராவும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

இலை அமைச்சர் நட்வர்சிங்கின் அனுதாபச் செய்தி ஒன்றை அப்போது திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்திடம் திரு மெஹ்ரோத்ரா கையளித்தார்.

ரா ஜீவ் அதிர்ச்சி!

புதுடில்லி ஜூலை 16

கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் மறைவு குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்திருக்கிறார். (உ)

லலித் பார்வையிட்டார்

கொழும்பு, ஜூலை

கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரத்தை அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டார்.

விசாரணைக்கு பிரேமா உத்தரவு

கொழும்பு, ஜூலை 16

கூட்டணித் தலைவர்கள் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பூரணவிசாரணை நடத்தும்படி பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று உத்தரவிட்டார். (உ)

இன்று கடைகளைத் திறக்க கூட்டாக வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 16

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் கொலைக்கண்டனம் தெரிவிக்கும் முகமாகவும், அஞ்சலி செலுத்தும் முகமாகவும் நேற்றும் நேற்று முன்தினமும் ஹர்த்தால் அனுஷ்டித்த பொது மக்கள், தமது அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதற்கு வசதியாக, வர்த்தகர்கள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) கடைகளைத் திறந்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒத்துழைக்க வேண்டும்.

-இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ்., ரெலோ ஆகிய அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

கூட்டணித் தலைவர்களின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

சகல வீட்டுத் தளபாடங்களும், மின்சார உபகரணங்களும் உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி செ. இராசநாயகம் No-01 கென்மென் ஒழுங்கை, சாவகச்சேரி. (11538)

பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத் தளபாடங்களும் சகல மின்சார உபகரணங்கள், Bicycle, Ty. writer, T. V. மற்றும் பல விற்பனைக்கு உண்டு; தினமும் காலை 9மணி முதல் மாலை 6 மணி வரை பார்வையிடலாம். SUBEICA, 843, பருத்தித்துறை வீதி, அரசடி, நல்லூர். (11497)

காணி விற்பனை

நவாலியில் 17 பரப்புக்காணி வளவுடன், பருத்தித்துறையில் ஹாட்லிக் கல்லூரி மாணவர் விடுதிக்குச் சமீபமாக 3பரப்புக் காணியும், மந்திகையில் கந்தமுருகேசனார் சிலை அருகில் 2 பரப்புத் தோட்டக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- செ. கணேசராசா, சட்டத்தரணி தம்பசெட்டி பருத்தித்துறை அல்லது இல; 195, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (11550)

கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Dekalb) பிறவுண் ;பேடு பிறவுன் சேவல் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் (19-7-89) புதன்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை. ரூ. 3/50) உடன் பதிவு செய்க. இல: 9, கந்தையா லேன், கன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்.) (1091)

தவறிவிட்டது

தமிழ், ஆங்கில மொழி இரண்டும் சேர்ந்த பெயர் பிரதி கொண்ட ஆதன உறுதி (பழைய தாய் உறுதி) பொலித்தீன் பையுடன் கன்னாகிட்டிச் சந்திக்கும் நாவலர் ரோட் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கும் 11.00 மணிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (11551)

வாடகைக்கு உண்டு

யாழ் மாநகரசபை எல்லைக்குள் போதனா வைத்தியசாலை, பெரியகடை றெயில்வே ஸ்ரேசன் போன்றவற்றிற்கு மிகவும் கிட்டிய தூரத்தில் வசதியுடன கூடிய வீடு வாடகைக்கு உண்டு. விரும்புவோர் உத்தியோகத்தராகவும், குடும்ப அங்கத்தவர்கள் ஐந்து பேருக்கு மேற்படாதவராகவும் முற்பணம் செலுத்தக் கூடியவராகவும் இருத்தல் நன்று. 563, C/o Uthayan. (1087)

தேவை

நல்ல தையல் தைத்து அனுபவம் உள்ளஇளம் பெண்கள் வேலைக்கு தேவை: ABARNAA TAILORING SHOP கைலாசபிள்ளையார் கோவிலடி சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குதொடர்பு கொள்ளவும். (11535)

ஸ்ருடியோ வேலை பழகியவர்களும், பழக விரும்புபவர்களும் (ஆண்கள்) தேவை. தொடர்பு: ஸ்ருடியோ நித்திய சித்திரா, சங்கானை. (1090)

யாழ். நகரிலுள்ள பிரபல மின் பொருள் விற்பனை ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர், காசாளர் தேவை. கல்வித் தகமைகள் க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் கணிதம், ஆங்கிலமும் சித்தி அடைந்தவர்களாக இருத்தல் வேண்டும்; வயதெல்லை 25-35 இடைப்பட்டவர்கள் 20-7-89 க்கு முன் விண்ணப்பிக்கவும். தொடர்பு! 564 C/o Uthayan. (சி/3045)

மணப் பெண்கள் தேவை

யாழ். இந்து வேளாள 27 வயது ஆசிரியருக்கும் 33 வயது Doctor க்கு Doctor பெண்ணும், 21 வயது போட்டோ கிறாப்பருக்கும் 31 வயது இரண்டு எஞ்சினியருக்கும், 31 வயது கோவியவின வங்கியாளருக்கும் தேவை. 'மங்களா ஏஜென்சி கொய்யாத்தோட்டம். (1096)

மணமகள் தேவை

யாழ். இந்து வேளாள 28 வயது D/Accountant மணமகனுக்கு டாக்டர் பெண் செவ்வாய்க் குற்றத்தில் தேவை: தொடர்பு! ABCDE 328 நாவலர்ரோட், ஆனைப்பந்தி. (1098)

கல்வி

S. K. ஜீவமோகனின் G.C.E. (O/L) 89 விசேட கணித, விஞ்ஞான வகுப்புக்கள் கோப்பாய் சைன் இன்ஸ்ரிரியூசனில் நடைபெறுகின்றன உடன் தொடர்பு கொள்க. சைன் இன்ஸ்ரிரியூசன், கோப்பாய். (11424)

MUSIC

Piano and Accordian-Lessons for Females Mrs Thomas St. Mary's Road, Sillalai. (1058)

WANTED

Wanted an Experienced Accounts, Clerk to main tain Accounts in English wiih a Sound Knowledge of Accounts and Book keeping, Retired persons toc will be Considered. Apply to: The warden karuna Nilayam, Kilinochchi. (1092)

மணமகன் தேவை

யாழ்: இந்து வின்வகுல அழகிய 32 வயதுடைய பெண்ணுக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ வேலையார்க்கும் அழகிய மணமகன் உடன் தேவை: தகுந்த சீதனம் கொடுக்கப்படும் சாதகக்குறிப்புடன் சகல விபரங்களையும் தருக. No: 78 C/o உதயன் யாழ்ப்பாணம். (11552)

மணமகள் தேவை

யாழ்ப்பாண வேளாள கத்தோலிக்க வெளிநாட்டில் B.Sc. ஆசிரியர் வீவில் வந்துள்ள அவருக்கு 36-43 வயதிற்கிடைப்பட்ட பட்டதாரி அல்லது அதனோடு ஒத்த உள்நாட்டு வெளிநாட்டு மணமகள் தேவை: வெளிநாட்டு வேலை வாய்ப்பு மணமகனுக்கு தரப்படும். சமயம் தடையாக இருக்காது. மங்களா ஏஜென்சி கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (1095)

இந்து இளைஞர் பேரவைக் கூட்டம்

யாழ்: மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆட்சிக்குழுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு.வே. கெ. தனபாலன் தலைமையில் நடைபெற உள்ளது.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 7 - 7 - 1912

மறைவு: 27 - 7 - 1988

திதி: 16 - 7 - 1989

செல்லையா கண்மணி

எங்கள் உயிரில் எங்கள் உள்ளங்களில் உறைந்து விட்ட எங்கள் அன்புத் தெய்வமே! எங்களைப் பிரிந்த ஆண்டொன்று ஆனதம்மா! உங்களின் அன்புருவம் எங்கள் நெஞ்சங்களில் இருந்து என்றென்றும் மறையாதம்மா! எங்களை வாழவைக்க நீங்கள் பட்டபாட்டினை எண்ணி எண்ணி மனது துடிக்கிறதம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய

அராலி வடக்கு முருகனைத் தினமும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்;
பிட்டப்பிள்ளைகள்.

செல்லையா கணேசன்,
அராலி வடக்கு,
செல்வா வீதி,
வட்டுக்கோட்டை. (1203)

ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் தம்பு வல்லிபுரம்

(பருத்தித்துறை இலங்கை வங்கி முன்னாள் முகாமையாளர்)

தோற்றம்: 21-04-1936 மறைவு: 17-07-1988

வங்கி வளர்த்தெடுத்த வள்ளல் நீ
வங்கத்தின் சிங்கம் நீ
தங்குதடையின்றித் தரயகத்தை
வென்றெடுக்க வந்தவனைத்

தந்தவன் நீ - வெற்றிக்கொடி நீ
அந்தோ! நீ சென்றுவிட்டாய்
ஆண்டோ ஒன்றாகி விட்டது
என்றும் மறவோம் நாம்

எப்படித் தாங்குவோம் உன் இழப்பை
நெஞ்சிருக்கும் வரை உன்
நினைவிருக்கும் ஈழ மண்ணிருக்கும்
வரை அந்த மணமும் இருக்கும்.

உங்கள் பிரிவால் வாடும்
மந்திகை, இலங்கைவங்கி ஊழியர்கள்,
புலோலி. பருத்தித்துறைக் கிளை.
(C/2909)

பொருளாதாரச் சிக்கனத்துடன் கூடிய ★ லால் சிற்றுல் மினி பஸ் ★

PROTOTYPE MODEL

பொருளாதாரச் சிக்கனத்துடன் கூடிய லால் சிற்றுல் மினி பஸ் 44 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடியது.

18 மாத உத்தரவாதமுள்ள உலகிலேயே சிறந்ததெனக் கருதப்படும் 5 வேகச் சக்தி அளிக்கும் HINO WD 5 எஞ்சின்களுடன் கூடியது.

(1) இருக்கைகளுக்கான 6740 m.m இட வசதி செய்யப்பட்டது.

(2) சக்கர இடைவெளி 12.5 m. கொண்டிருக்கும்.

(3) மினி பஸ்களுக்கென பிரத்தியேகமாக அமைந்த 315 லிலோ கிறாமுடன் கூடிய 4 சிலிண்டர் எஞ்சின்களைக் கொண்டிருக்கும்.

(4) சிறந்த குளிரூட்டமைப்பிற்காக வெப்பமூட்டுவிக்கும் அமைவு தாராளமாக 3250 ச. ச. மீ. ஆக இருக்கும்.

(5) 5 வேகக் கதி அளிக்கும் சிங்கிரோ மெஷ்யர்ப் பெட்டியுடன் கூடியது.

(6) சற்றுப் பருமனான 13 m.m நீளமுடைய நீடித்து உழைக்கக் கூடிய பிறேக்குகளைக் கொண்டது.

(7) நம்பகமாக இயக்கம் அதிஉயர் வேகம் 83.6 mph ஆகவும் சீரான ஆர்முடுகல் வீதம் 17 5 ஆகவும் இருக்கும்.

(8) ஷொக்கப் சோபர்கள் முன்புறமும் பின்புறமும் பொருத்தப்பட்டிருக்கும்.

(9) பிரயாணிகள் நின்று கொண்டேனும் வசதியாகப் பிரயாணம் செய்ய ஏதுவாக 1880 m.m உயரம் கொண்ட கூரை முகடுகள் அமைக்கப்பட்டிருக்கும்.

(10) ஈடு சொல்லமுடியாத எரிபொருள் சிக்கனம் கொண்டது.

(சாதாரணமாக 8 கி. மீ. இற்கு 1 லீற்றர் எரிபொருள் தேவைப்படும்)

லங்கா
அசோக் லேய்லண்ட் லிமிட்.,
38 - 40, எட்வர்ட்ஸ் லேன்,
டுப்ளிகேஷன் றோட்.
(பௌத்தாலோக மாவத்தைச் சந்தியருகே)
கொழும்பு - 3.
தொலைபேசி: 502286, 502532.

முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

திரு. இராமலிங்கம் பாலேந்திரா
(புகைப்படப் பிடிப்பாளர்)

தோற்றம்: 02 - 07 - 1935 மறைவு: 16 - 07 - 1988

ஓ..... அன்பான டடாவே, நீங்கள் மறைந்து ஒருவருடம் ஓடி விட்டதே! ஆனாலும் எப்பொழுதும் நீங்கள் எங்கள் அருகிலே; பாசத்தின் சிகரமான உங்களுக்காக என்றும் நாம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம்!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள் ரஞ்சனி, ரமேஷ், ராஜன், றூபன், தாயார், சகோதரி, மருமகள், மருமகன்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை (11511)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

விசுவநாதர் பொன்னம்பலம்
(பரிசோதகர் கட்டிடத் திணைக்களம் - யாழ்ப்பாணம்)

அன்னை மடியில்: 21 - 01 - 1937 ஆண்டவன் அடியில்: 16 - 07 - 1988

திதி: 04 — 08 — 1989

கடமையே கண்ணாய் ஊருக்கொரு சேவகனாய் கோயிலுக்குத் தொண்டனாய் யாவருக்கும் இனியனாய் பண்புடன் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை எம் மனது மாறவில்லை உங்கள் நினைவு.

தங்கள் பிரிவால் தவிக்கும் எங்கள் உள்ளங்களில் உலவி வரவும், உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்களை நினைவும்
மனைவி, மக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், உறவினர், உறவினர்கள்,
நண்பர்கள்.

மாவிட்டபுரம் தெற்கு,
தெல்லிப்பளை. (11499)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழர் ஒன்றுபட்டால்தான் அவர்களுக்கு விடிவு, விமோசனம்

கலைஞர் கருத்து

சென்னை, ஜூலை 15

வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றுபட்டால்தான் அவர்களுக்கு விடிவும் விமோசனமும் கிடைக்கும் என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி அமைச்சர் தொண்டமானிடம் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை திரு. கருணாநிதியை அவரது இல்லத்துக்குச் சென்று அமைச்சர் தொண்டமான் சந்தித்தார்.

அப்போது திரு. கருணாநிதி திரு. தொண்டமானிடம் கூறியதாவது;

வடக்கு – கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு நல்வாழ்வும் சமாதானமும் அரசியல் அதிகாரமும் கிடைக்கவேண்டுமானால் அவர்கள் வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து நிற்பதை விட்டு எல்லோரும் ஒரு முகப்பட்டு நிற்கவேண்டும்; தமது கோரிக்கைகளை ஒரே குரலில் ஒலிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு விடிவு கிடைக்கும். விமோசனமும் கிடைக்கும்.

இந்தியப்படை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் திருப்பி அழைக்கப்படத்தான் வேண்டும்.

தமிழருக்குப் பாதுகாப்பளிக்கவும் உதவவும் இலங்கை சென்ற இந்தியப் படை தாமும் மாண்டு, தாமும் காயப்பட்டு, தமிழர்களில் ஒரு பிரிவினருடன் போராடவேண்டியேற்பட்டது துரதிஷ்டவசமானது.

தமிழர்கள் வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து நிற்காமல் ஒரு முகமாக ஒற்றுமைப்பட்டு நின்றிருந்தால் இந்தத் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்காது;

—இப்படி திரு. கருணாநிதி மேலும் தெரிவித்தார். (உ – எ)

IESL - JAFFNA CENTRE

SEMINAR ON 'HOUSING'

Due to unavoidable circumstance the sub-committee have decided to cancel the proposed Seminar on 'Housing' on 18th July 1989 at Kailasapathi Hall University of Jaffna.

Secretary cum treasurer
The Institution of Engineers,
Sri Lanka. Jaffna Centre.

[1210]

நள்ளிரவில் கேட்ட வேட்டுக்கள்

வடமராட்சி, ஜூலை 16

கரவெட்டி யாக்கரைப் பகுதியில் புதன்கிழமை நள்ளிரவு வெடிச்சத்தங்கள் கேட்டன. இதனால் அப்பகுதியை அண்டிய பகுதிகளில் பதற்றம் நிலவியது. வெடிச்சத்தங்களுக்கான காரணம் தெரியவில்லை. (ஒ-160)

4 கைதிகள் தப்பினர்

கொழும்பு, ஜூலை 16

கல்கிசை நீதிமன்றத்துக்கு கடந்த செவ்வாயன்று கூட்டி வரப்பட்ட நான்கு கைதிகள் தப்பி ஓடி விட்டனர். (ஒ-எ)

சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் ஜூலை 16

புதன்கிழமை இரவு வீட்டில் இருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டவர் பின்னர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த பி. பவளராசா (வயது 39) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (உ-10)

கேள்வி அறிவித்தல்

பிரதேசக் கல்வித் திணைக்களம் கிளிநொச்சி

ஆசிய அபிவிருத்தி வங்கி கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக கல்விகள் கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித்திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்குக் கட்டிடத் திருத்த வேலை செய் தற்கெனக் கல்வித் திணைக்களம் கட்டிடத் திணைக்களம் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய ஏதாவது ஒரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 50உம் மீளளிக்கப்படும். கேள்வி வைப்புப் பணமாக ரூபா இருநூற்றி ஐம்பது (250.00)உம் செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம் கேள்வி வைப்புப் பணம் ஆகியவை வங்கிக் கட்டளையாகவோ அல்லது காசுக் கட்டளையாகவோ செலுத்தப்பட வேண்டும். கேள்விகள் 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி காலை 10.30 மணிக்கு கிளிநொச்சிக் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச் சமயம் கேள்விகாரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறின் தெரிவு மறு அறிவித்தல் இன்றி இரத்துச் செய்யப்படும்.

கிராமோதைய சபைகளுக்கும் / கிராம அபிவிருத்திச் சபைகளுக்கும் வேலைகளை பழங்கல்களில் ரூபா 375,000/- வரைக்குமான வேலைகளை மேற்படி வேலைகளைச் செய்வதற்கு விருப்பமுடைய குறித்த சபைகளும் / சங்கங்களும் தங்களின் விருப்பத்தை எழுத்து மூலம் 1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அறிவித்தல் வேண்டும். இப்படி அறிவிக்கும் பொழுது இவர்களுக்குக் கட்டிட நிர்மாணத்திலுள்ள நிபுணத்துவத்தைப் பற்றிய ஓர் அறிக்கையை மாவட்டக் கட்டிடப் பகுதிப் பிரதம பொறியியலாளரிடமிருந்தும் தாங்கள் தற்பொழுது செய்துகொண்டிருக்கும் வேலைகளின் விபரத்தையும் சங்க நிலைமை பற்றிய அறிக்கையையும் பகுதி உதவி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலதிக விபரங்களைக் கிளிநொச்சி பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் உள்ள கட்டிடப் பகுதிப் பொறுப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

க. கந்தசாமி,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
கிளிநொச்சி. 16: 7: 1989

பதிவு செய்திருக்க வேண்டிய தொகை

1. கிளி/கனகாம்பிகைக்குளம், அ. த. க. பாடசாலை, பெருந்திருத்தம் மலசலகூடம், அமைத்தல் — 100,000,00
2. கிளி/கனகாம்பிகைக்குளம், இ. த. க. பாடசாலை, கிணறு அமைத்தல் — 100,000,00
3. கிளி/கனகாம்பிகைக்குளம், அ. த. க. பாடசாலை, 100' / 20' புதிய கட்டிடம் அமைத்தல் — 400,000,00

(சி/2908)

நாஷனல் சிப்பிங் அன்ட் ரவல்ஸ்

பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர்

★ ஜேர்மனி ★ இத்தாலி
★ பிரான்ஸ் ★ சுவிஸ்

ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு வாரம் ஒரு பயண ஏற்பாடு

விபரங்களுக்கு:

NATIONAL SHIPPING AND TRAVEL

New Lalitha Building,
185/2, Kasthuriar Road,
JAFFNA.

(C/2961)

உடனடி

வேலைவாய்ப்பு

T. V. TRAVELS

● கனடா ● அமெரிக்கா
● அவுஸ்திரேலியா

நாட்டிற்குச் செல்வோருக்கு விசா, ரிக்கற் செய்து தரப்படும்.

★ குறுகிய நேரத்தில் செய்து தரப்படும்

மற்றும்

● ஜேர்மன்

செல்வோருக்கு உடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

● சவூதி அரேபியா
Cleaners 450 SR

★ ஒரு மாதத்தில் பயணம் செய்யலாம்.

● KUWAIT நாட்டிற்கு
House Maid பெண்கள் (கிளீனர்) 30 KD

மற்றும்

சவூதி, குவைத், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் பிரயாணம் செய்யலாம்.

T. V. TRAVELS

Brown Road,
KOKUVIL.

(C-3057)

வெளிமாவட்டங்களில் கடமை ஆற்றி

யாழ். கல்வி மாவட்டத்துக்கு நியமனம் பெற்ற ஆசிரியர்கள்

(முன்னைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் ஜூலை, 16

மாவட்ட ரீதியில் ஆசிரிய சேவையில் அமர்த்தப்பட்ட 268 பேர் யாழ் மாவட்டத்துக்கு ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

மாவட்ட ரீதியில் ஆசிரிய நியமனம்பெற்று அந்த மாவட்டங்களில் 5வருடச் சேவையை முடித்துக்கொண்ட ஆசிரியர்களில் பலர் பின்னர் இடமாற்றம்கோரி இருந்தனர்.

அவ்வாறு இடமாற்றம் கோரிய 268 பேருக்கே யாழ் மாவட்டத்தில் புதிதாக ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது. இவர்களின் பெயர்ப்பட்டியலில் இரு பகுதிகள் ஏற்கனவே உதயனில் வெளிவந்துவிட்டன. இறுதிப் பகுதி இன்று வெளிவருகிறது.

நிக்கவரெட்டியாவில் இருந்து மாற்றம்பெற்றோர்

பெண்கள்:- ரி.ராஜபாலன், கே. மங்கையர்க்கரசி.

ஆண்கள்:- ஏ. சுபாஸ்கரன், ஆர். சோதிநாதன், எஸ். ஜெயவீரசிங்கம் எம் .உதயகுமார்.

குருநாகலையிலிருந்து மாற்றம் பெற்றோர்

பெண்கள்:- பி. கந்தசாமி, எம். வேலாயுதபிள்ளை, ஆர். வைரமுத்து எஸ். யோகேஸ்வரி, ஆர். விக்ரர், ஆர். முருகையா, பி. நாகலிங்கம், வை. சந்திரசேகரம்பிள்ளை, பி. இளையதம்பி, வி. முத்துலட்சுமி.

ஆண்கள்: வி, பரராஜசிங்கம், என். துரைராஜசிங்கம்.

கிளிநொச்சியிலிருந்து மாற்றம் பெற்றோர்

பெண்கள்:- ஏ. எஸ். முருகையா, ஜி. விஸ்வநாதன்.

ஆண்கள்:- எஸ். கிருஷ்ணமூர்த்தி.

கண்டியிலிருந்து மாற்றம பெற்றோர்

பெண்கள்:- வி. வேலும்மயிலும், என். கனகசபாபதி, வி. ஸ்ரீஸ்கந்தராஜா, ஸி.சண்முகநாதன். எம். செல்லையா, ஐ.வேலுப்பிள்ளை. என். வல்லிபுரம், வி. செல்வநாயகம், கே. ஜெயராஜ், எஸ். செல்லையா, ரி.கமலராணி, ரி.தேவராஜன், ஜே. அருளுசலம், ஆர். நடராஜா, கே. விக்னேஸ்வரி, கே. சௌந்தரநாயகி.

ஆண்கள்:- எஸ். விக்னேஸ்வரநாதன், ஏ. குணரட்ணம், எம். ரி. ரட்ணம், பி. கதிர்காமநாதன். ஏ. இளங்கோ.

மட்டக்களப்பில் இருந்து மாற்றம் பெற்றோர்:

பெண்கள்; ஸி. யூ. நித்தியராஜ், எஸ். பெஞ்சமின், கே. எஸ். ஜோசப், ஆர். ஸ்ரீதரன், ஜே. மகாலிங்கம், எம். தேவராஜன், ரி. சௌந்தரராஜா, ஏ. ஞானேஸ்வரி.

கொழும்பிலிருந்து மாற்றம் பெற்றோர்:

பெண்கள்: பி. சின்னையா, எம். சண்முகநாதன்: பி. வேலாயுதபிள்ளை, கே. காந்திமதி, ஐ. பத்மநாதன். எஸ். சிவானந்தம், எஸ். ஸ்ரீநடராஜா. நாகலோகபிள்ளை, நாகலக்ஷ்மிதேவி, எஸ். கோகுலதாஸன், கே. சுலோசனா, ஆர். யோகானந்தன், எஸ். அ ஸ்ஒளி, சிவகுமாரி தங்கராசா, பி. சிவபாலன், ஆர். சிவகுமார். பவானி சரவணமுத்து.

ஆண்கள்: எஸ். எஸ். தங்கராஜா, கே. சிவராசா.

குளியாப்பிட்டியிலிருந்து மாற்றம் பெற்றோர்:

ஆண்கள்: கே. செல்வரத்தினம், ஜே. அன்ரன் பிரான்ஸ்:

பெண்கள்: ரி. சுப்பிரமணியம், வி. வேலுப்பிள்ளை, எஸ். சுப்பிரமணியம்

பொலநறுவையிலிருந்து மாற்றம் பெற்றோர்:

பெண்: ஜி. வைத்திலிங்கம்.

களுத்துறையிலிருந்து மாற்றம் பெற்றோர்

ஆண்கள்; ஏ. அகிலதாஸ், எஸ். நாகராஜா, ஆர். ஜெயமனோகர்,

பெண்கள்: எஸ். நன்னித்தம்பி, டி. கிருஷ்ணபிள்ளை;

கம்பஹவிலிருந்து மாற்றம் பெற்றோர்

ஆண்கள்: வி. பாலசுப்பிரமணியம், வி.விநாயகமூர்த்தி. வி.சடாட்சரம், என். மகேஸ்வரன்,

பெண்கள்: ரி. சுந்தரவதி, ஏ. சுமலேஸ்வரி,

இரத்தினபுரியிலிருந்து மாற்றம் பெற்றோர்

பெண்: ஸி. இராயப்பு

மினுவாங்கொடையிலிருந்து மாற்றம் பெற்றோர்

ஆண்கள்: எஸ். கைலாசநாதன், எஸ் கிருஷ்ணராஜா, எஸ். தர்மலிங்கம், ஏ. குணசிங்கம்,

கேகாலையிலிருந்து மாற்றம் பெற்றோர்

ஆண்கள்: எஸ். சிவலிங்கம், எஸ். பாலசுப்பிரமணியம்,

ஏனையோர்

பி. சுப்பிரமணியம் (பண்டாரகொஸ்வத்தவிலிருந்து), ஜி. வைத்திலிங்கம் (கத்துருவலவிலிருந்து).

(முற்றும்)

சமய சந்நிதிகளில்

உலவிக்குளம் பிள்ளையார் கோயில்

அச்சுவேலி, ஜூலை 16

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் ஆலய கேர் உற்சவம் நாளை திங்கட்கிழமையும் தீர்த்த உற்சவம் செவ்வாய்க்கிழமையும் நடைபெறும். (க – 11)

புனித யாகப்பர் ஆலய உற்சவம்

குருநகர், ஜூலை 16

புனித யாகப்பர் ஆலய வருடாந்த நவநாள் உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6-15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது;

தினமும் காலை 5-30 மணிக்கு செபமாலை, பிரார்த்தனை, அருளுரை, திருப்பலி என்பன நடைபெறும்.

22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு முதல் நன்மை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பெறும்.

24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5-30 மணிக்கு நற்கருணை ஆராதனை, சற்பிரசாதச் சுற்றுப்பிரகாரம் இடம் பெறும்.

25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். காலை 5 மணிக்கு திருச்சொரூபவவி நடைபெற்று நற்கருணை ஆசீர்வாதம், புனித யாகப்பர் சொரூப ஆசீர்வாதத்துடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவடையும்.

பங்குத்தந்தை வண. பி. எம். இம்மனுவேல் அடிகள் இதனைத் தெரிவித்தார். (ச-51)

★ அதி உயர்ந்த தரத்திற்கும் ★
உத்தரவாதத்திற்கும்
வாங்குங்கள்



சிக்மா பம்ப்ஸ்
CEYGMA PUMPS



மின் மோட்டர்கள் (ELECTRIC MOTOR PUMPS)
நீர் இறைக்கும் இயந்திரங்கள் (ENGINE DRIVEN PUMPS)

ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

உங்கள் சகல நீர் இறைக்கும் தேவைகளையும் பூர்த்தி செய்யத் தொடர்பு கொள்ளுங்கள்

UNITED AGRO ENGINEERING

274/1, ஆஸ்பத்திரி வீதி,
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

தொழிற்சாலை:
நாவற்குழி, கைதடி.

(C/3052)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. ரி. அன்சன்ஸ்
* பல் கட்டுபவரும்
* கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவரும்
302, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(B.M.C க்கு முன்பாக)
முகாமையாளர்
Dr. றெஜி சொலமன்

உதயன்

16 · 07 · 1989 ஞாயிற்றுக்கிழமை

வி. ரி. அன்சன்ஸ்
* பல் கட்டுபவரும்
* கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவரும்
302, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(B.M.C க்கு முன்பாக)
முகாமையாளர்
Dr. றெஜி சொலமன்

வடக்கு,கிழக்கு முற்றாக இருளில்!

திருத்தவேலை செய்வதில் தடங்கல்!!

மட்டக்களப்பு, ஜூலை 16

ஹரமலைக்கும் உக்குவெலைக்கும் இடையில் கடந்த வியாழன் மாலை குண்டுவைத்துத் தகர்த்தப்பட்ட இரு மின் கோபுரங்களையும் திருத்துவதில் தடங்கல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

29 ஆம் திகதிவரை மின் கோபுரங்களைத் திருத்க் கூடாது என்று மின்சார சபை ஊழியர்கள் ஜே.வி.பி. இயக்கத்தினரால் எச்சரிக்கப்பட்டுள்ளனராம். இந்தமின்தடை காரணமாக அம்பாறை மாவட்டத்தைத்தவிரவடக்கு-கிழக்கு மாகாணங்கள் இருளில் மூழ்கியுள்ளன.

இங்கினியாகலை மின் விநியோகத் திட்டத்தில் இருந்து அம்பாறை மாவட்டத்துக்கு மின்விநியோகம் செய்யப்படுகிறது. மட்டக்களப்புக்கும் இரவு 10.00 மணி முதல் மறுநாள் நண்பகல் 12.00 மணிவரை அம்பாறையிலிருந்து மின் விநியோகம் செய்யப்படுகிறது. (இ-21)

தொழிற்சங்க சம்மேளனம் கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 16

அ. அமிர்தலிங்கம், வெ. யோகேஸ்வரன் ஆகியோர் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து ஈழத்தொழிற்சங்க சம்மேளனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

இதுயாருடைய செயல் என்பதை தமிழ்பேசும் மக்கள் சரியாக இனங்கண்டுகொண்டுள்ளனர்.

இலங்கை அரசுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ்பேசும் மக்களையே கொன்றொழிக்கத் தலைப்பட்டுள்ள கூட்டத்தை எதிர்த்துப் போராட தமிழ்பேசும் அனைத்து மக்களும் முன்வர வேண்டும்.

இந்தக்கோரமான கொலைகளுக்கும் இலங்கைஅரசிற்குமுள்ள மறைமுகமான தொடர்புகள் தமிழினத்தின் கோபாவேசத்தைத் தூண்டவே செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-க)

எதிரணிகள் கண்டனம்

கொழும்பு, ஜூலை 16

நாடாளுமன்ற எதிர்க்கட்சிக் குழு அமிர், யோகேஸ்வரன் மரணங்களைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டது.

அறிக்கையில் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திரு. அத்தாவுட செனவிரத்ன [ஐ சோ. மு] திரு. வி. கே. யோகசங்கரி [ஈ. பி. ஆர். எல். எவ்.], திரு. தினேஷ் குணவர்த்தன [ம. ஐ. மு.] ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்தச் சம்பவம் சம்பந்தமான பின்னணி பற்றி பாரபட்சமற்ற பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. [உ-எ]

ஈ.என்.டி.எல்.எவ். கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

திரு. அமிர்தலிங்கம், திரு. யோகேஸ்வரன் ஆகியோரின் கொலை குறித்து ஈ.என்.டி.எல்.எவ்வின் பொதுச்செயலாளர் திரு. ஞானசேகரம் விடுத்த அனுதாபச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழினத்தின் தியாகச் செம்மலின் திடீர் மறைவுக்காக ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணி தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. இதே வேளையில் இந்த வன்முறைப் படுகொலைகளுக்கான காரணவாதிகளைக் கடுமையாகக் கண்டிக்கிறது.

ஈழத்தந்தை எஸ். ஜே. வி செல்வநாயகத்தின் வலக்கரமாக விளங்கிய அமிர்தலிங்கம் நாவலர் என்னும் பட்டம் பெற்று நாவன்மை மிக்கவர். வாலிப பருவத்திலிருந்து இறுதி மூச்சு உள்ளவரை பல அறப்போராட்டங்களை நடத்தியவர். பலமுறை சிறை சென்று பல தியாகத்தும்புகளை ஏற்றவர்.

இலங்கையில் பத்திரிகை தணிக்கை முறை மூலமும் அவசரகால பிரகடனத்தின் மூலமும் எந்த உண்மையான செய்தியும் வெளி உலகத்திற்கு எட்ட முடியாத நிலையை நடைமுறைப்படுத்தி விட்டு இந்தப்படுகொலையை புரிந்திருப்பது கூட்டுச் சதியை அம்பலப்படுத்துகிறது.

இந்த வன்முறைக் கொலையாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவதற்கு குரல் கொடுக்க வேண்டுமென்று பல்வேறு மக்களைக் கேட்டுக் கொள்கிறோம். (உ)

சர்வதேச நாணய சபை பிரதிநிதிகள் வருகை

கொழும்பு, ஜூலை 16

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தூதுக்குழு ஒன்று இவ்வார இறுதியில் கொழும்பு வரவுள்ளது.

இலங்கைக்கு நிதி உதவி வழங்குவது பற்றி முக்கிய பரிசீலனை ஒன்றை மேற்கொள்வதே இவ்விஜயத்தின் நோக்கம் என்று தெரிகிறது.

முன்னரும் ஒருதடவை சர்வதேச நாணய நிதியத்தின் குழு ஒன்று கொழும்பு வந்து நிதி உதவி வழங்குவது பற்றி பேச்சுக்கள் நடத்தியது தெரிந்ததே. (உ-எ)

டில்லியில் தேஷ்முக் குழு பேச்சுக்கள் பற்றி விளக்கம்

பிரதமர் ராஜீவ் காந்தியின் சிறப்புத் தூதர் திரு. பி. ஜி தேஷ்முக் நேற்று முன்தினம் இரவு விசேட விமானத்தில் புதுடில்லி திரும்பினார்.

கொழும்பில் ஜனாதிபதியை இரண்டு முறை சந்தித்துப் பேசியபோதும் இலங்கை அதிகாரிகள் மட்டத்தில் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போதும் அறியப்பட்ட விஷயங்களைத் திரு. தேஷ்முக் இந்திய அரசின் மத்திய குழுவிடம் நேற்றுத் தெரிவித்தார்

இக்குழுவில் பாதுகாப்பு அமைச்சர் கே. ஸி. பந்த், வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளும் இடம் பெற்றிருந்தனர்.

கொழும்பில் இந்தியத் தூதுக்குழு நடத்திய பேச்சுக்கள் பூர்வாங்க ரீதியில் இருந்தன என்று வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

500 ரூபா கள்ளநோட்டு விவகாரம்

வெளிநாட்டு வர்த்தகரை பொலீஸார் தேடுகின்றனர்

கொழும்பு, ஜூலை 16

ஐநூறு ரூபா கள்ளநோட்டு விவகாரம் தொடர்பாக இந்திய வர்த்தகர் ஒருவரை இரகசியப் பொலீஸார் தேடிவருகின்றனர்.

ஐநூறு ரூபா கள்ளநோட்டு இலங்கையில் அச்சிடப்படவில்லை என்றும், வெளிநாடு ஒன்றில் அச்சிடப்பட்டிருப்பதாகவும் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இதுவரை 20 கள்ளநோட்டுக்கள் பிடிக்கப்பட்டிள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது (உ-எ)

அமைதிப்படை. ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறமறுப்பின் அதனால் எழும் நிலையை எப்படிச்சமாளிப்பீர்கள்?

ஜனாதிபதி: உலகிலேயே நான்காவது பெரியஇராணுவம் இலங்கையிடம் இல்லை எம் அயலவர்களுடன்சண்டை பிடிக்கக கூடிய இராணுவபலமும் எம்மிடம் இல்லை

நாம் தார்மீக பலத்திலும் அன்பான பேச்சிலும் தான் தங்கியிருக்கிறோம்

'வலிமைதான் சரியானது' (Might is right) என்றகொள்கைக்கு நான் ஆதரவில்லை. எனது கொள்கை 'சரியானது தான் வலிமை மிக்கது'—(Right is might) என்பதே.

ஆகவேதான் இறுதியில் உண்மை வெல்லும் என்பதில் நான் நம்பிக்கை வைத்துள்ளேன். இதைவிரைவிலோ அல்லது பின்னரோ உணர்ந்து கொள்ள முடியும். (உ-எ)

இரு சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று பிற்பகலில் 2 சடலங்கள் அமைதிப் படையினரால் ஒப்படைக்கப்பட்டன.

சூட்டுக் காயங்களிற்கு இலக்காகி மரணமான இருவரின் சடலங்களே நேற்று ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன. [உ-9]

தங்கம் கடத்தியவர் சிக்கினர்

கொழும்பு, ஜூலை 16

20 லட்சம் ரூபா பெறுமதியான 40 தங்கக் கட்டிகளை கடத்தி வர எத்தனித்த இலங்கையர் ஒருவருக்கு கங்கத் திணைக்களம் 62 லட்சம் ரூபா அபராதம் விதித்தது.

கடந்த வியாழக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்த ஏயர் லங்கா விமானத்தில் இந்த நபர் வந்திறங்கினார். (உ-எ)

2ஆவது நாளாக..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும்.

இன்று மாலையே பூதவுடல்கள் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருகோணமலை நகரசபை மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிஅளவில் பூதவுடல்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலைவரை பொது மக்களின் அஞ்சலிக்காக யாழ்நகரில் தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு அருகாமையில் வைக்கப்பட்டிருக்கும்

இரு தலைவர்களின நும் பூதவுடல்கள் எங்கு தகனம் செய்யப்படும் என்பது குறித்து முரண்பாடான செய்திகள் நேற்று மாலையில் கிடைத்தன. இது தொடர்பாக இறுதி முடிவு இன்று எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகள் நேற்று இரண்டாவது நாளாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

யாழ்நகரில் வாழைகள், தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வாகனங்களில் கறுப்புக் கொடிகள் காணப்பட்டன, நகரில் சோகீதம்இசைத்துக்கொண்டிருந்தது.

நேற்று பஸ்சேவைகளைநடத்தும்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதிலும் பயணிகள் இல்லாத நிலையில் பஸ்கள் பல பஸ்நிலையத்தில் தரித்து நிற்கக் காணப்பட்டன.

அதே சமயம் வடமராட்சியில் நேற்று அரச-தனியார் பஸ் சேவை எதுவும் நடைபெறவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இன்று...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி அஞ்சலி நிகழ்ச்சிகளில் அனைவரும் கலந்துகொள்வதற்கு வசதியாக நாளை [திங்கட்கிழமை] தேநீர் கடைகள் தவிர ஏனைய கடைகளை மூடி துக்கம் அனுஷ்டிக்கும்படியும் இந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

அமிர்-யோகேஸ் மரண விசாரணை . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சத்தம் கேட்டது.

முன்வழியால் மேலேசெல்ல நான் முயற்சித்தபோது யாரோ கடுவதுதெரிந்தது. உடனே நான் பின் வழியால் மல்மாடி சென்றபோது திரு. அமிர்தலிங்கம் கதிரைமீது விழுந்துகிடந்தார். நிலத்தில் யோகேஸ்வரன் விழுந்துகிடந்தார். சிவசிதம்பரம் தோளில் இரத்தக்காயத்துடன் சாய்ந்து நிற்கக்காணப்பட்டார்.

அடுத்த அறையில் இருந்து துப்பாக்கிச் சத்தம் கேட்டது. நான் பின்வழியால் கீழேவந்து பொறளை பொலிஸுக்கு டெலிபோன் செய்தேன்.

பத்து நிமிடங்களில் பொலீஸார் வந்து காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்.

மெய்ப்பாதுகாவலர்களால் கட்டுக்கொல்லப்பட்ட மூவரும் ஏதேனும் ஓர் இயக்க உறுப்பினர்கள்தானா என்பதை வேறு வழிகளால் நான் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

இப்படி சேனாதிராசா சொன்னார்.

இன்ஸ்பெக்டர் அளித்த சாட்சியம்

திரு. அமிர்தலிங்கத்தின் பாதுகாப்புக்கு பொறுப்பான அதிகாரி சப் இன்ஸ்பெக்டர் தம்பிராசா கந்தசாமி (வயது 39) சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:

என்னை விட தேசியதுணைப் படையைச் சேர்ந்த மூன்று பேரும் அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவைச்சேர்ந்த இருவருமாக மொத்தம் ஆறு பேர் பாதுகாப்புப் பிரிவில் இருந்தோம்.

அமிர்தலிங்கம் இரவு 7.30 மணி அளவில் வெளியே போக இருப்பதாக சம்பவ தினம் மாலை 4.00 மணிஅளவில் எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

6.45 மணியளவில் நானும் சகபாதுகாப்பு அதிகாரிகளான நிஸங்கா லஷ்மணன் ஆகியோரும் மேல்மாடியில் உள்ள எமது அறைக்குச் சென்று—அமிர்தலிங்கத்துடன்வெளியே போவதற்காக உடை மாற்றினோம்.

அச்சமயம் மஞ்சள் நிற டாக்ஸி ஒன்று வாசலில்வந்து நின்றதை நான் மேல்மாடியில் இருந்து கவனித்தேன்.

டாக்ஸியில் இருந்து மூன்று பேர் இறங்கி வந்தார்கள்.

நான் மேல்மாடியில் இருந்து கீழே இறங்கி வந்துவாசலில் நின்ற பாதுகாப்பு அதிகாரி சத்தியமூர்த்தியிடம் அவர்கள் ''எதற்காக வந்திருக்கிறார்கள்?'' என்று கேட்டேன்

அவர்கள் யோகேஸ்வரனைச் சந்திக்க வந்திருப்பதாக சத்தியமூர்த்தி என்னிடம் சொன்னார்.

பல்கனிக்கு வந்த யோகேஸ்வரன் வாசலுக்கு வந்திருந்தவர்களை பார்த்த பின்னர் அவர்களை உள்ளே விடும்படி கூறினார்.

நீதிவான்: நீர் ஏன் அவர்களை சோதனையிடவில்லை.

சாட்சி: பிற்பகல் 4 மணியளவில்யோகேஸ்வரன் என்னிடம் ஒருகுறிப்பிட்ட நபர் வருவார் அவரைச்சோதனையிட வேண்டாம் நேரே மேல்மாடிக்கு அனுப்பி வையுங்கள் என்று கூறியிருந்தார்.

இதற்கு முன்னரும் இப்படியானவர்கள் ஆயுதங்களை வைக்கி டோக்கி சாதனங்களுடன் வந்திருக்கின்றனர்.

சிலகாலத்திற்கு முன்னர் நான் அமிர்தலிங்கத்திடம் ''ஆயுதங்களுடன் வருபவர்களை உள்ளே அனுமதிப்பது உங்களின் பாதுகாப்புக்கு நல்லதல்ல''—என்று கூறியிருந்தேன்.

அதற்கு அமிர்தலிங்கம், ''அவர்களை சோதனையிட வேண்டாம் சேதனையிட்டால் அவர்கள் மனம் புண்படும் மனம் புண்பட்டால் பின்னர் வரமாட்டார்கள்'' என்றுபதிலளித்திருந்தார்.

சிநேகபூர்வமாக அழைத்துச் சென்றார்

வந்தமூவரில்ஒருவர்கீழ்மாடியில் நின்றார். மற்ற இருவரும் மேல்மாடிக்குச் சென்றனர். யோகேஸ்வரன் அவர்களை கைகளில் பிடித்துக்கொண்டு சிநேகபூர்வமாக அழைத்துக் கொண்டு மண்டபத்துக்கு சென்றார்.

சிறிது நேரத்தில் அமிர்தலிங்கமும், சிவசிதம்பரமும் மேல்மாடிக்கு வந்து அவர்களுடன் சேர்ந்துகொண்டனர்.

சில நிமிடங்களில் துப்பாக்கிச் சூட்டுச்சத்தம் கேட்டது. அதைத்தொடர்ந்து எங்கள் அறைக்கு முன்னால் நாம் வந்தோம்.

வந்தவர்களில் இரண்டுபேர் சுட்டபடி பின்னோக்கி வந்தனர். பின்னர் திரும்பி சுட்டபடி வெளியே ஓடினர். நானும் அவர்களை நோக்கி சுட ஆரம்பித்தேன்.

பாதுகாப்பு அதிகாரி நிசங்காவும் சுட ஆரம்பித்ததைக் கண்டேன். இரண்டுதுப்பாக்கி மனிதர்களும் கீழ்மாடிக்கு ஓடி வந்தனர்:

நானும் நிசங்காவும் துரத்திக்கொண்டு சென்று சுட்டோம். அதன்பின்னர் இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டது.

மங்கையர்க்கரசி

திருமதி மங்கையர்க்கரசியம்மா அமிர்தலிங்கம் (வயது 52) சாட்சியமளிக்கையில் சொன்னதாவது;

டி. வியில் 6.30 மணி செய்தியைக் கவனித்துக்கொண்டிருந்தேன். ராஜா என்ற வேலைக்காரச் சிறுவன் யோகேஸ்வரன் அனுப்பிய கடிதம் ஒன்றைக் கொண்டுவந்து என்னிடம் தந்தான்.

சிவசிதம்பரத்துடன் மேல்மாடிக்கு வரும்படி யோகேஸ்வரன் எனது கணவரைக் கேட்டிருந்தார்.

லண்டனில் இருந்து எனது மகன் டாக்டர் ரவியின் டெலிபோன் அழைப்பு அப்போது வர இருந்தது. டெலிபோன் வரும்வரையாவது பொறுத்திருக்கும்படி நான் கணவரைக் கேட்டேன்.

''இல்லை மேலே போய்க் கதைத்துவிட்டு விரைவில் வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு அவர் சென்றார்.

திடீரென்று துப்பாக்கி சூட்டுச் சத்தம் கேட்டது. நான் மேலே போக முயற்சித்தேன். பாதுகாப்பு அதிகாரி சத்தியமூர்த்தி போகவேண்டாம் என்று தடுக்கவே நான் பின் வழியால் ஏறிச் சென்றேன்.

அங்கு கணவர் கதிரை மீது விழுந்து கிடந்தார்.

அவரின் தலையை உயர்த்தினேன். அப்போது அவரின் வாய்க்குள் இருந்து இரத்தம் வெளிவந்தது. தலையில் காயங்களைக் கண்டேன். அவருடன் பேசினேன். ஆனால் கணவர் பேசவே இல்லை.

இவர்களை கணவர் ஏன் சந்திக்க விரும்பினார் என்பது எனக்குத் தெரியவில்லை. இந்த நபர்களை பாதுகாவலர்கள் ஏன் சோதிக்கவில்லை என்பதும் எனக்குத் தெரியவில்லை. இவர்களை எனக்கு முன்பின் தெரியாது. பாதுகாப்பு அதிகாரிகள் மீது எனக்குப் பூரண நம்பிகையுண்டு.

திருமதி யோகேஸ்வரன்

திருமதி சரோஜினி யோகேஸ்வரன் (வயது 48) சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:-

சம்பவ தினம் காலையில் எனது கணவர், குறிப்பிட்ட இருவரின் பெயரைக் கூறி, ''அவர்கள் இன்று வர உள்ளனர். சாப்பிட்டும் குளிர்பானமும் தயாரிக்கவும்''—என்று என்னிடம் தெரிவித்தார்.

அன்றைய தினம் காலையிலும் பிற்பகலிலுமாக இரண்டு தரம் அவர்களில் ஒருவர் டெலிபோனில் எனது கணவருடன் பேசினார்.

இவர்கள் முன்னரும் நான்கு முறை வந்து போனதால் இவர்களை எனக்கு நன்கு தெரியும்.

அவர்கள் இருவரும் சம்பவ தினம் மாலையில் வரும்போது நான் டிஈவியில் தமிழ்ச்செய்தியை அவதானித்துக்கொண்டிருந்தேன்.

அப்போது அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும் வந்து பேச்சுக்களில் கலந்துகொண்டனர். கணவரின் சொற்படி வந்தவர்களுக்கு சான்ட்விச்சும் குளிர்பானமும் வழங்கினேன். அதன்பின்னர் நான் அறையைவிட்டுச் செல்கையில் சிநேகித முறையில் அவர்கள் அனைவரும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

திடீரென்று துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது.

அறைக்குள் சென்றபோது கதிரையில் இரத்தம் வடிய அமிர்தலிங்கம் காணப்பட்டார். எனது கணவர் நிலத்தில் விழுந்து வேதனையில் துடித்துக்கொண்டிருந்தார்.

அமிர்தலிங்கத்தின் உடலில் இருந்து வெளியேறிய இரத்தமும் எனது கணவரின் இரத்தமும் ஒன்றாகச் சேர்ந்து குளமாகக் கண்டேன்.

அவர்கள் சுட்டதை நான் காணவில்லை. நான் அறைக்குள் வரும்போது அவர்கள் மறைந்துவிட்டனர்.

—இப்படி திருமதி யோகேஸ்வரன் சொன்னார்.

மார்பிலும் இருதயத்திலும் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் யோகேஸ்வரனும்—

தலையிலும் நெஞ்சிலும் ஏற்பட்ட காயங்களால் அமிர்தலிங்கமும் மரணமானார்கள் என்றும் வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

மேல் விசாரணை நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

மரண அறிவித்தல்கள்

திருமதி. கத்தறின் அழகராஜா (கலா)

திருமதி கத்தறின் (கலா) அழகராஜா 14-7-89இல் அகால மரணமானார் இவர் அழகராஜா (பொலிஸ் திணைக்களம், யாழ்ப்பாணம்) வின் அன்பு மனைவியும், அஜந்திவின் அருமைத் தாயாரும், நாவற்குழியைச் சேர்ந்த திரு. திருமதி. அகஸ்தீன் அவர்களின் அருமைப் புதல்வியும், திருமதி. அன்ரோனியா சேவியர் (நெதர்லாந்து), மற்றில்டா (நீலு) (யாழ். பல்கலைக் கழகம்), பெப்பிற்றஸ், கலிஸ்ரஸ், அக்னெற்ரு, சிந்தியா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரான்சிஸ் சேவியரின் மைத்துனியும், திரு. திருமதி. னைமுத்து அவர்களின் அன்பு மருமகளும் ஆவார்.

இறுதிச் சடங்குகள் நாவற்குழி அந்தோனியார் கோவில் சேமக்காலையில் 15 - 7 - 89 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அழகராஜா

நாவற்குழி. (11553)

செல்வன் திருமுருகன்

தெற்கு புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த செல்வன் திருமுருகன் (கட்டிட மேற்பார்வையாளர், யூனியன் கல்லூரி வேலைத்தலம்) நேற்று சனிக்கிழமை அகால மரணமானார்.

புன்னாலையின் ஈமைக்கிரியைகள் அவரது புன்னாலைக்கட்டுவன் இல்லத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) மத்தியானத்தின் மேல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்லிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 301 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-07-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org